**தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 2 - 2021**

---

தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 2 இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முடிவுறுத்தல் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது.
ஏற்கனவே செயற்படும் மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை வரையான தெற்கு அதிவேகப்பாதையினை (கொழும்பு தொடக்கம் மாத்தறை) விஸ்தரிப்பதன் மூலம் முன்மொழியப்பட்ட அம்பாந்தோட்டை சர்வதேச அபிவிருத்தி மைய செயற்திட்டம், வர்த்தக தலைநகரம், அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகம் மற்றும் சர்வதேச விமானநிலையம் (மத்தள) ஆகியவற்றுக்கு இடையே இணைப்பை வழங்குவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும்.
கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் பகுதி 02 இன் கீழான பெலியத்த தொடக்கம் வெற்றிய வரையான தெற்கு அதிவேக பாதையின் 26 கிலோமீற்றர் இனை விஸ்தரிப்பதற்காக மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 60,601.60 மில்லியனாக இருந்ததுடன் அதில் 85 சதவீதமான ரூபா 46,920 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 360.29 மில்லியன் கிரயத்தை சிவில் மற்றும் ஆலோசனை பணிகளிற்காக சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி 15 சதவீதமான ஐ.அ.டொலர் 63.58 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது.
செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஒக்தோபர் 28 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 ஒக்தோபர் 27 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2020 ஏப்ரல் 11 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 திம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் முடிவுறுத்தல் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 58,874.64 மில்லியன் தொகையான நிலையான சொத்துக்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் (RDA) ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், இது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான RDA இன் நிதிக்கூற்றுக்களில் ரூபா 51,854.35 மில்லியன் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, 2023 மார்ச் 20 வரை செயற்திட்டத்தின் முடிவுறுத்தல் நிதிக்கூற்றை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதால் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான RDA இன் சொத்துக்கள் ரூபா 7,020.29 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டது. | 7,020.29 | கருத்துரை வழங்கப்படவில்லை. | சொத்துக்கள் RDA கணக்குகளில் தாமதமின்றி மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் கடன் உடன்படிக்கையின் 2.2 ஆம் உறுப்புரையின் பிரகாரம் கடன் மீது திரண்ட வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணம் செலுத்தப்பட்ட போதிலும் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை எனவே, நிதிக்கூற்றுக்களில் வெளிநாட்டுக் கடன் மீதி மற்றும் நடைமுறை வேலை என்பன அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | 3,204.42 | பொதுத் திறைசேரியால் கடனுக்கான வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் அவர்களின் வாக்குப்பணம் மூலம் செலுத்தப்பட்டு அவர்களின் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. எனவே, இது பொதுத் திறைசேரியின் கிரயமாக கருதப்படுகிறது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது வட்டிக் கட்டணங்கள் மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்களுடன் நேரடியாக தொடர்புபடுவதில்லை. | செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 04 இன் 18 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்களை கையகப்படுத்துதல், நிர்மாணித்தல் அல்லது உற்பத்தி செய்தல் ஆகியவற்றுக்கு நேரடியாக பங்களிக்கக்கூடிய கடன்பெறுதல் கிரயம், அந்த சொத்துக்களின் கிரயத்தின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்பட வேண்டும். எனினும், செயற்திட்டமானது ரூபா 7,517.72 மில்லியன் தொகையான உள்ளூர் வங்கிக் கடனுக்கான கடன்பெறுதல் கிரயத்தை 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூலதனமாக்கியிருக்கவில்லை. | - | செயற்திட்ட கிரயத்திற்கு நிதியளிப்பதற்காக உள்ளூர் வங்கிகளில் இருந்து RDA அவ்வப்போது காலக் கடன்களைப் பெற்றுள்ளது. எனினும், இந்தக் கடன்களுக்கான வட்டிக் கிரயம் அதன் முதன்மைக் கடன்பெறுபவரான RDA ஆல் தனித்தனியாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. RDA புத்தகங்களில் கடனுடன் தொடர்புடைய அனைத்து காசுப்பாய்ச்சல்களும் மேற்கொள்ளப்பட்டதுடன் செயற்திட்டத்தின் ஈடுபாடு எதுவும் காணப்படவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தை கடைப்பிடித்தல். |
| (ஈ) | பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இல. 08 இற்கு முரணாக, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய இழப்பீடு மற்றும் தாமத வட்டிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - | காணி சுவீகரிப்பு மற்றும் இழப்பீட்டுக் கொடுப்பனவு என்பன RDA இன் காணிப் பிரிவால் கையாளப்பட்டன. எனவே காணி சுவீகரிப்பு மற்றும் வட்டிக் கொடுப்பனவு தொடர்பான அனைத்து பொறுப்புக்களும் ஏற்கனவே RDA இன் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தை கடைபிடித்தல். |
| (உ) | நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புகளின் பிரகாரம், மேற்பார்வை ஆலோசகரால் கூட்டுத்தாபன வரியாக ஒரு தொகை கோரப்பட்டிருந்தது. எனினும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 08 இன் பிரகாரம் அந்தப் பொறுப்புக்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக செயற்திட்டத்தின் பொறுப்புக்கள் அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | 33.12 | ஆலோசனைக்கான உடன்படிக்கையின் விசேட நிபந்தனைகளின் 1.10 ஆம் உட்பிரிவில் GOSL ஆல் ஆலோசகரின் கூட்டுத்தாபன வரியை கொடுப்பனவு செய்தல் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நாளதுவரை செயற்திட்டத்தால் இனங்காணப்பட்ட தொகையுடன் கொடுப்பனவு முகவர் (RDA) உடன்படவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தை கடைப்பிடித்தல். |
| (ஊ) | காலதாமதமான கொடுப்பனவுகள் காரணமாக ஒப்பந்ததாரருக்கு வட்டியை செலுத்துவதற்கு பிணக்குத் தீர்த்தல் சபையால் (DAB) தீர்மானம் வழங்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இல. 08 இன் பிரகாரம் ஏற்பாடு | 31.67 | DAB ஆல் அங்கீகரிக்கப்பட்ட தொகையை குறைப்பதற்கு ஒப்பந்ததாரர் ஆட்சேபனையை தெரிவித்தார். கருத்து வேறுபாடு காரணமாக நிலைமையைக் கருத்தில் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தை கடைப்பிடித்தல். |

| | | | |
|---|---|---|---|
| செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, செயற்திட்டத்தின் பொறுப்புக்கள் அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | | கொண்டு, உரிமை கோரல் தொகை யதார்த்தமாக மதிப்பிடப்படவில்லை. | |
| (எ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3.23 மில்லியன் தொகையான காணி சுவீகரிப்பு தொடர்பான நிறுத்திவைத்தல் பண விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை, எனவே கணக்காய்வின் போது அதை உறுதிப்படுத்த முடியவில்லை. | 3.23 | கருத்துரை வழங்கப்படவில்லை. | விபரங்கள் கணக்காய்விற்கு வழங்கப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவு | செயற்திட்டத்தின் வழிநடாத்தல் குழுக் கூட்டம் குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது அது நடாத்தப்பட்டிருக்கவில்லை. | வழிநடாத்தல் குழுக் கூட்டம் 2021 ஆம் ஆண்டில் நடாத்தப்படவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை கடைப்பிடித்தல். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

**(i) காணியை பதிவுசெய்தல்**

| கூறு | செயற்பாடு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் காணித் துண்டுகள் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் காணித் துண்டுகள் | | |
| காணி சுவீகரிப்பு | RDA இற்கு உரித்துறுதி உரிமைத்துவ மாற்றம் | | | 2020 பெப்ரவரி 24 இல் இச்செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 வரையிலும் காணி சுவீகரிப்பு சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் 32 காணித்துண்டுகள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | காணி சுவீகரிப்பு செயன்முறையில் வினைத்திறமையின்மை. |
| | அரச காணிகள் | 914 | 32 | | |
| | தனியார் காணிகள் | 2,170 | | | |

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தின் பதில்** | இச் செயற்திட்டத்தில் பிரதேச செயலாளர்கள் கையகப்படுத்தும் உத்தியோகத்தர்களாக செயற்படுகின்றனர். அதன் பிரகாரம், இழப்பீட்டை செலுத்திய பின்னர் 44 ஆம் பிரிவின் செயன்முறையும் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. |
| **கணக்காய்வாளரின் பரிந்துரை** | மேலதிக கிரயத்தை தவிர்ப்பதற்காக, கால எல்லையினுள் குறித்துரைக்கப்பட்ட செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |

**(ii) காணி சுவீகரிப்பு**

| கூறு | செயற்பாடு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | **எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் காணித் துண்டுகள்** | **அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் காணித் துண்டுகள்** | | |
| காணி சுவீகரிப்பு | காணிகளின் சுவீகரிப்பு<br>அரச காணிகள்<br>தனியார் காணிகள் | <br>914<br>2,170 | 2884 | 2014 ஆம் ஆண்டில் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 26 வாரங்களுக்குள் காணி சுவீகரிப்பு நடைமுறைகளை விரைவுபடுத்தி பூர்த்திசெய்வதற்கு நில அளவை திணைக்களம், விலைமதிப்பீட்டு திணைக்களம் மற்றும் பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 14.82 மில்லியன் தொகையான ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த செயன்முறை கணக்காய்வு திகதி வரையிலும் இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. | காணி சுவீகரிப்பு செயன்முறையில் வினைத்திறமையின்மை. |

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தின் பதில்** | தற்போது, இந்தப் பிரிவின் காணி சுவீகரிப்பின் பிரதான நோக்கெல்லை ஏற்கனவே பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் சில சூழ்நிலை மேலதிக சுவீகரிப்புக்கள் செயன்முறையில் உள்ளன. எனினும், நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்கு அப்பால் பூர்த்தி செய்யப்பட்ட எந்தவொரு செயற்பாட்டிற்கும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் அனுமதிக்கப்படாது. |
| **கணக்காய்வாளரின் பரிந்துரை** | கால எல்லையினுள் குறித்துரைக்கப்பட்ட செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| சாத்தியவள அறிக்கையின் 8.33 ஆம் அத்தியாயத்தில் சேவைப் பகுதியின் இரண்டு இடங்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது | இது திட்டங்களில் உள்ளடக்கப்படாத போதிலும் தலைவர் RDA, ERD மூலம் சீனாவின் EXIM வங்கியுடன் | குறித்துரைக்கப்பட்ட செயற்திட்ட இலக்குகளை உரிய காலத்தில் |

| | | |
|---|---|---|
| மதிப்பிடப்பட்டிருக்காததுடன் தெற்கு அதிவேக பாதையின் முழு விரிவாக்கத்திற்கும் சேவைப் பகுதியை நிர்மாணிப்பதற்கு BOQ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, தெற்கு அதிவேக பாதையை பயன்படுத்துபவர்களுக்கு வெலிபென்ன முதல் அம்பாந்தோட்டை வரையிலான 176 கிலோமீற்றர் தூரத்திற்கு எந்தவொரு சேவைப் பகுதியும் காணப்படவில்லை. | தொடர்பு கொண்டு, வீதிப் பயனாளர்களின் நலனுக்காக ESEP இற்கான இரண்டாவது சேவைப் பகுதியை நிறுவுவதன் முக்கியத்துவத்தை விளக்கினார். எனினும், சீனாவின் EXIM வங்கி அதற்கான நிதியை வழங்க மறுத்தது. | அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| பாதீட்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 9,279.35 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 9,018.42 மில்லியன் தொகை மீளாய்வாண்டிற்காக செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | செயற்திட்ட காலப்பகுதியினுள் நிதியைப் பயன்படுத்துவதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகளை அடைந்துகொள்ளுதல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| தெற்கு அதிவேக பாதையின் விரிவாக்கல் செயற்திட்டப் பகுதி 2 ஆனது பெலியத்தவிலிருந்து வெற்றிய வரையான சுமார் 26 கிலோமீற்றர் ஆகும். இது மாத்தறையிலிருந்து அந்தறவெவ மற்றும் அம்பாந்தோட்டை வழியாக மத்தள வரை அணுகல் - கட்டுப்படுத்தப்பட்ட அதிவேக பாதையின் இரண்டாவது பிரிவாகும். பொருளாதார அபிவிருத்தியை தூண்டுதல், சுற்றாடலுக்கு உகந்த அதிவேக பாதையை வழங்குதல், பயண நேரத்தைக் குறைத்து வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்கப்படுத்துதல், விரைவான அபிவிருத்தியின் காரணமாக மாற்றுப் பகுதிகளில் புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல் போன்றன செயற்திட்ட நோக்கங்களாக இனங்காணப்பட்டன. எனினும், எனினும், முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகளை உருவாக்குவது மற்றும் குறிகாட்டிகளை அடைந்துகொள்வதற்கான மதிப்பீடு என்பன கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை. | தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கை செயற்திட்ட நோக்கங்களைக் கொண்டுள்ளது. | செயற்திட்டத்தின் இறுதியில் KPIs நிறுவப்பட்டு அளவிடப்பட வேண்டும். |